# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## இரண்டாம் ஆண்டு – நான்காம் பருவம்

## ஜூலை–ஆகஸ்ட் – 2025
## A051 மொழிவரலாறு – 1

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மக்களின் அடையாளம் எது?
2. வெற்றொலி என்பதன் பொருள் யாது?
3. தமிழ்மொழியின் வரலாற்றை அறியத்துணை புரிவது எது?
4. ஒரு மொழியில் சொற்களின் பொருளை அகர வரிசையில் விளக்குவது எது?
5. மொழிகளின் ஒப்பியல் ஆய்வின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
6. குகைக் கல்வெட்டு எத்தனை வரிகளை உடையது?
7. கல்+தீது – இச்சொற்கள் புணர்ச்சியில் எவ்வாறு திரிபடைகின்றன?
8. ராமன், ராவணன், ரவி ஆகிய பிறமொழிச் சொற்கள் தமிழ் ஒலியமைப்பிற்கு ஏற்ப எவ்வாறு எழுதப்பட்டன?
9. மொழிமுதல் ஙகரம் வருவதாக எந்த இலக்கண நூல் குறிப்பிடுகிறது?
10. திருவாசகம் மற்றும் திருக்கோவையாரைப் பாடியவர் யார்?
11. ஐஞ்சிறு காப்பியங்கள் தோன்றிய காலம் எது?
12. இரண்டாம் குலோத்துங்கச் சோழன் அவையில் அமைச்சராகத் திகழ்ந்தவர் யார்?
13. நளவெண்பா என்னும் நூலின் ஆசிரியர் யார்?
14. மராத்தி மொழிக் கல்வெட்டுகள் எந்த எழுத்துகளில் பொறிக்கப்பட்டன?
15. தமிழ் மொழியில் முதன்முதலில் ஏட்டில் எழுதப் பெற்ற முதல் உரை நூல் எது?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. மொழியின் இலக்கணம் யாது?
2. பேச்சுறுப்புகள் என்றால் என்ன?
3. திராவிட மொழிக் குடும்பம் – குறிப்பு வரைக.
4. குகைக் கல்வெட்டுகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.
5. சோழர் காலத்து மொழியை அறிவதற்கான இலக்கிய ஆதாரங்களைக் குறிப்பிடுக.
6. கிளைமொழி எவ்வாறு உருவாகின்றது?
7. ஒலியன் எழுத்து முறை என்றால் என்ன?
8. கால்டுவெல் ஐயரின் உரைநடை எவ்வாறு அமைந்துள்ளது?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழ்மொழி வரலாற்றை அறியத் துணை புரியும் சான்றுகள் குறித்து விளக்குக.

   (அல்லது)

   (ஆ) உருபொலியனியல் குறித்து விளக்கி வரைக.

2. (அ) பல்லவர் காலத்தில் எழுந்த இலக்கியங்கள் குறித்து கட்டுரைக்க.

   (அல்லது)

   (ஆ) ஐரோப்பியர் வருகையால் தமிழில் தோன்றிய உரைநடை வளர்ச்சிக் குறித்து எழுதுக.

3. (அ) தமிழ் எழுத்து வடிவங்கள் குறித்து விளக்குக.

   (அல்லது)

   (ஆ) தொடரில் பொருள் மயக்கம் நேரும் சூழ்நிலைகளில் அம்மயக்கத்தைத் தவிர்க்கும் முறைகள் பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளவற்றை விளக்குக.

***